காலமானார்

கருணாம்பாள் வாணவராயர் (78)

பொள்ளாச்சி, ஜூலை 27: மறைந்த தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கத்தின் மகளும், என்ஜிஎம் கல்லூரித் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ்வாணவராயர் மனைவியுமான கருணாம்பாள் வாணவராயர் (78) கோவையில் உள்ள அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 26) இரவு காலமானார்.



இவரது இறுதிச் சடங்குகள் பொள்ளாச்சியை அடுத்த சமத்தூர் அரண்மனைத் தோட்டத்தில் திங்கள்கிழமை மாலை நடைபெற்றன.

இவருக்கு கணவர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், மகள் கற்பகவல்லி ராஜ்குமார், மகன் சங்கர் வாணவராயர் ஆகியோர் உள்ளனர்.

மறைந்த கருணாம்பாள் வாணவராயர் தனது தந்தையின் வழியில் பல்வேறு கல்வி, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். கோவையில் உள்ள பவன் கலாசார மையத்தின் பொறுப்பாளராக 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி, மாணவர்களுக்கு கலை, கலாசாரம், அறநெறி தொடர்பான வகுப்புகளை நடத்தி வந்தார். 'மங்கையர்க்கரசியார் அறநெறி அறக்கட்டளை' என்னும் அமைப்பை நிறுவி, தனியாக ஆசிரியர்களை நியமித்து பல பள்ளிகளில் மாணவர்களுக்கு அறநெறி பாடங்களைக் கற்பித்து வந்துள்ளார்.

இரங்கல்: இவரது மறைவுக்கு, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி.அருண்ராஜ், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, தங்கம் தென்னரசு, அர.சக்கரபாணி உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கரூர் சம்பவம்: அரசுப் பணி நியமனம் ரத்து

உயர்நீதிமன்றம் உத்தரவு



மதுரை, ஜூலை 27: கரூரில் தவெக பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட அரசுப் பணி நியமன ஆணைகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு திங்கள்கிழமை உத்தரவிட்டது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 10 குழந்தைகள், 18 பெண்கள், 13 ஆண்கள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இது தொடர்பாக சிபிஐ விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி தமிழக அரசு சார்பில் கடந்த ஜூலை 10-ஆம் தேதி வழங்கப்பட்டது.

இதனிடையே, 'பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு வேலை வழங்குவது தொடர்பாக முறையான வழிகாட்டு தல்கள் அல்லது கொள்கை முடிவுகள் வகுக்கப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கவோ, நிர்வாக நடவடிக்கை எடுக்கவோ கூடாது. உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்த வழக்கில் இறுதித் தீர்ப்பு வரும் வரை அரசுப் பணி வழங்குவதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும்' எனக் கோரி மனிதநேய ஜனநாயகக் கட்சி மாநில துணைச் செயலர் சீனி அஹமது, நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த தீரன் திருமுருகன், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரைச் சேர்ந்த சந்தோஷ் குமார் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனுக்கள் தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை ஏற்கெனவே விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஜூலை 27-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர். சக்திவேல் ஆகியோர் முன் திங்கள்கிழமை இந்த மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது, 'வயது, கல்வித் தகுதி போன்ற நிலையான வழிகாட்டுதல்களின்படியே கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் இந்த விதிமுறைகளைப் பின்பற்றியே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன' என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டால், பேருந்து விபத்துகள், சிவகாசி பட்டாசு ஆலை வெடி விபத்துகள் போன்ற நிகழ்வுகளிலும் இதே போன்ற கோரிக்கைகள் எழக்கூடும். கருணை அடிப்படையில் வேலை கிடைக்க பலர் காத்திருக்கும் நிலையில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பது ஏன்?.

கருணை அடிப்படையில் வழங்கப்படும் பணி நியமனங்களை முறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் வழக்கமான ஒப்புதல் நடைமுறைகளிலிருந்து கரூர் சம்பவ நியமனங்களுக்கு அரசு விலக்கு அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனத்துக்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழக அரசுத் தரப்பில் சாதாரண பணி வழங்கியதாகக் கூறுவதை ஏற்க முடியாது. எந்தப் பணியும் சாதாரண பணியல்ல. அது ஒவ்வொருவரின் குடும்பத்துக்கு உதவும் பணியே.

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தவெக அரசு வழங்கிய இந்தப் பணி நியமன ஆணைகள் சட்டத்தின் முன் சமத்துவத்தையும், அரசுப் பணியில் சம வாய்ப்பையும் உறுதி செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 14, 16-ஆவது பிரிவுகளுக்கு முரணாக உள்ளன.

மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசுப் பணி வழங்குவதை விட, திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், வாழ்வாதார உதவிகளை வழங்குவதே மிகப் பொருத்தமான, நிலையான மறுவாழ்வு முறையாக இருக்கக்கூடும். எனவே, கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்த குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட பணி நியமன ஆணைகள் ரத்து செய்யப்படுகின்றன என்றனர் நீதிபதிகள்.

மேல்முறையீடு செய்ய தமிழக அரசு முடிவு



சென்னை, ஜூலை 27: கரூர் சம்பவத்தின்போது உயிரிழந்த குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட பணி நியமன அரசாணையை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு மேல்முறையீடு செய்யும் என சட்டத் துறை அமைச்சர் ஆர்.நிர்மல் குமார் தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் நிர்மல் குமாரிடம் இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்து அவர் கூறியதாவது:

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் நகலை முழுமையாகப் பெற்று முழு விவரங்களும் சட்ட ரீதியாக ஆய்வு செய்யப்படும். தீர்ப்பின் சட்ட அம்சங்கள் குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்த பின்னர், தமிழக அரசின் நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் எடுத்துரைக்கும் வகையில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்றார் அவர்.

பாளை. சிறையில் எம்எல்ஏவை சந்தித்த உதயநிதி ஸ்டாலின்

திருநெல்வேலி, ஜூலை 27: தமிழக முதல்வருக்கு மிரட்டல் விடுத்து பேசியதாக கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயனை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார்.

அண்மையில் கோவில்பட்டியில் நடைபெற்ற திமுக பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய்க்கு மிரட்டல் விடுத்துப் பேசியதாக விளாத்திகுளம் சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டார். அவர், தற்போது பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், திமுக இளைஞரணி செயலரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு வெள்ளிக்கிழமை வந்தார்.

அவருடன் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் கள் இரா.ஆவுடையப்பன், மு.அப்பாவு, முன்னாள் அமைச்சர்கள் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பி.கீதாஜீவன் உள்ளிட்டோரும் சிறைக்குள் சென்று சட்டப்பேரவை உறுப்பினர் மார்க்கண்டேயனை சந்தித்து நலம் விசாரித்தனர்.



விளாத்திகுளம் சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயனை சந்திப்பதற்காக பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்.

பேரவைத் தலைவருடன் அதிமுக கொறடா சந்திப்பு

சென்னை, ஜூலை 27: சென்னை தலைமைச் செயலகத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகரை, அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார். இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அதிமுக சார்பில் போட்டியிட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்து ஆளும் கட்சியில் இணைந்துள்ளனர். அவர்கள் மீது கட்சித் தாவல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கக் கோரி அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி சார்பில் பேரவைத் தலைவரிடம் மூன்று முறை கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்த கடிதத்தின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராஜிநாமா செய்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் அளித்த விளக்க கடித நகலை எங்களுக்கு கொடுக்க வேண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தக் கடித நகலைப் பார்த்து உரிய விளக்கம் அளிக்க முடியும் என தெரிவித்தோம். ராஜிநாமா செய்த பேரவை உறுப்பினர்கள் அளித்த விளக்க கடித நகல்களை வழங்குவதாக பேரவைத் தலைவர் தெரிவித்தார் என்றார் அவர்.

இன்று திமுக எம்எல்ஏக்கள் கூட்டம்

சென்னை, ஜூலை 27: தமிழக பட்ஜெட் ஆக.5-ஆம் தேதி தாக்கல் செய்யப்படுவதையொட்டி, திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் காணொலி மூலம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இது குறித்து திமுக கொறடா எ.வ.வேலு திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கை: தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் செவ்வாய்க்கிழமை (ஜூலை 28) மாலை 5 மணிக்கு காணொலிகாட்சி மூலம் நடைபெறும். இதில், தமிழக பட்ஜெட் தொடர்பாக விவாதிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

திமுக ஆட்சியின் முறைகேடுகளை விசாரிப்பதில் தவெக அரசு மெத்தனம்

அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஜூலை 27: தமிழகத்தில் கடந்த திமுக ஆட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி வழக்குப் பதியும் நடவடிக்கையில் தவெக அரசு மெத்தனமாகச் செயல்படுவதாக நிழல் நிதி அறிக்கையை வெளியிட்ட பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்தார்.



பாமக சார்பில் 24- ஆவது ஆண்டு நிழல் நிதி அறிக்கையை சென்னையில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் திங்கள்கிழமை வெளியிட்டு, செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் கனிம வளங்களை முறையாகக் கையாள்வதன் மூலம் வரி அல்லாத வருவாயாக ரூ.2.17 லட்சம் கோடி வருவாய் ஈட்டலாம். மொத்த செலவினம் ரூ.6.96 லட்சம் கோடி எனில், வருவாய் செலவினம் ரூ.6.10 லட்சம் கோடியாக்கலாம். அதன்படி ரூ.50 ஆயிரம் கோடி நிலுவைக் கடனை அடைக்கலாம். இவ்வாறு செயல்பட்டால் 10 ஆண்டுகளில் கடன் சுமை கட்டுக்குள் கொண்டுவரப்படும்.

முந்தைய திமுக ஆட்சியில் மணல் கொள்ளை, கனிமவளக் கொள்ளை, பணியாளர் நியமனம், ஒப்பந்தங்கள், பணியிட மாற்றம் ஆகியவற்றில் முறைகேடுகள், மது வணிகம், வரி ஏய்ப்பு ஆகிய முறைகேடுகள் என ரூ.6 லட்சம் கோடி அளவுக்கு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அவை குறித்து வழக்குப் பதிவதுடன், தனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தும் விசாரிக்க வேண்டும். தற்போதைய தவெக அரசு கடந்த திமுக ஆட்சி ஊழல்கள் குறித்த விசாரணையில் மெத்தனமாக செயல்படுவது சரியல்ல.

நீட் தேர்வு கூடாது என்பதே பாமகவின் நிலைப்பாடாகும். லாப, நஷ்டத்தை பார்க்காமல் மெட்ரோ திட்டத்தை மதுரை, கோவையில் அரசு செயல்படுத்த வேண்டும் என்றார்.

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

லீகல் & சப்போர்ட் டீம், 2வது தளம், கதவு எண். 31, பழைய எண்.14, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

சுவாதீன அறிவிப்பு

விதி 8(1)-ன் கீழ் (அசையா சொத்துக்களுக்காக)

SARFAESI சட்டம் 2002ன் u/s 13(4) சொத்துக்களை வைத்திருப்பது தொடர்பான அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீராய்த்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002)-ன் கீழ் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13(12), உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதி 9-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி கீழ் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு மற்றும் அவர்களுக்கு இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்ப செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், அதனுடன் வாசிக்கப்பட வேண்டிய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (நுழைக்க) விதிகளின் கீழ் விதி 9-க்கு இணங்கவும் கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி ஒவ்வொரு கணக்குகளுக்கு எதிராக குறிப்பிட்டுள்ள தேதிகளில் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்/அடமானதாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ளக் கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும்.

சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)ன் வரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள கடன்தாரர்/அடமானதாரர்கள் /ஜாமீன்தாரர்களுக்கு உள்ள கால அவகாசத்தை கவனத்தில் கொள்ளவும்.

கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி மற்றும் கணக்கு எண்.	அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி	நிலுவைத் தொகை
Ref No. HL / 7570 **1. திரு. முஜிப்பூர் ரகுமான் (விண்ணப்பதாரர்)** த/பெ திரு. சித்திக் அலி. **2. திருமதி. சாம்ச நிஷா (இணை விண்ணப்பதாரர்),** க/பெ. திரு. முஜிப்பூர் ரஹ்மான், **இருவரின் முகவரி :** B62, ஜோதி நகர், D-காலனி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் - 642 001.	13.05.2026	24.07.2026	11.05.2026 அன்று வரை ரூ.49,68,981/- மேலும் இத்தொகை 11.05.2026 வரை வட்டி மற்றும் இதர கட்டணங்கள்

முஜிப்பூர் ரகுமான் அவர்களுக்கு சொந்தமான சொத்தின் விவரங்கள்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி துணைப்பதிவு அலுவலக வரம்பிற்கு உட்பட்ட பொள்ளாச்சி தாலுக்கா, பொள்ளாச்சி டவுன் என்ற முகவரியில் டவுன் சர்வே எண்.2433, வார்டு-B, பிளாக் -44, வருவாய் பதிவேட்டின்படி டவுன் சர்வே எண்.2433, வார்டு-B, பிளாக் -44என்பது **மொத்த பரப்பளவு - 4040 சதுர அடி நிலத்திற்கான எல்லைகள் :** 80 அடி அகல ராமசாமி கவுண்டன் தெருவிற்கு வடக்கே, (புதிய டவுன் சர்வே எண்.2439), ஜோதி நகர் D காலனி, மனை எண்.47ல் உள்ள கட்டடத்திற்கு தெற்கே, (புதிய டவுன் சர்வே எண்.2434), ஜோதி நகர் D காலனி, மனை எண்.B63ல் உள்ள கட்டடத்திற்கு கிழக்கே, (புதிய டவுன் சர்வே எண்.2438), ஜோதி நகர் D காலனி, மனை எண்.B61ல் உள்ள கட்டடத்திற்கு மேற்கே, (புதிய டவுன் சர்வே எண்.2432). **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கில் - 40 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் - 40 அடி. தெற்கு வடக்காக கிழக்கில் - 101 அடி. தெற்கு வடக்காக மேற்கில் - 101 அடி. மொத்தம் - 4040 சதுர அடி மற்றும் அங்குள்ள அனைத்து வழக்கமான உரிமைகள் மற்றும் நடைபாதை உரிமைகள் உட்பட.

தேதி : 24.07.2026
இடம் : சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்

DATE OF BIRTH CORRECTION

I, **D KUMAR** residing at No. 3/571-13F, Muniyasamy Kovil Back side, Padanthal, Sattur, Virudhu Nagar, Tamil Nadu -626203. My wife date of birth 10/09/1986 is wrongly mentioned in my service record. Her correct date of birth is 04/08/1981 as per Aadhaar, Pan and other documents which is correct. Affidavit No: FM 670680 dated 18/07/2026 before Notary.

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

கோயம்புத்தூர் - 641018, ரேஸ் கோர்ஸ், பழைய எண் 49, புதிய எண் 46 - ல் வசிக்கும், மறைந்த திரு. எல். பக்தவத்சலம் அவர்களின் மகன் விஜய் வெங்கடசாமி (ஆதார் எண்: 2038 4213 7409) வயது 79, ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், எனக்கும் எனது சகோதரர் திரு.பி.லட்சுமிநாராயணனுக்கும் பாத்தியப்பட்ட சொத்தான கோவை மாவட்டம், சிங்காநல்லூர் கிராமம், க.ச.எண்.413/2-ல் உள்ள சொத்துக்குண்டான, சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 24.03.2006-ம் தேதிய, 2227/2006 எண்ணாக பதிவான கிரய மூல அசல் ஆவணம் கடந்த 24.07.2026 அன்று எங்கள் வழக்கறிஞரிடம் கருத்துரைபெற வேண்டி சென்றபோது கோயம்புத்தூர், கோபாலபுரம், நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள அன்னபூர்ணா பீப்பிள்ஸ் பார்க் (Annapoorna Peoples Park) அருகே காணாமல் போய்விட்டது. மேற்படி ஆவணம் யாருக்கேனும் கிடைத்தால், தயவுசெய்து எனது அலைபேசிஎண் 98433 26626-ல் என்னைத் தொடர்புகொள்ளவும் அல்லது மேலேகுறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கோ தொடர்பு கொண்டு ஒப்படைக்க வேண்டுகிறேன். இப்படிக்கு

விஜய் வெங்கடசாமி, Cell No. 98433 26626

NAME CHANGE

I, D KUMAR, residing at No. 3/571-13F, Muniyasamy Kovil Back side, Padanthal, Sattur, Virudhu Nagar, Tamil Nadu -626 203. My Son name JACK AUGUSTIN is wrongly mentioned in my service record. His correct name is **JACK AUGUSTIN K** as per Aadhaar, Pan and other documents which is correct. Affidavit No:FM 670684 dated 18/07/2026 before Notary.

NAME CHANGE

I, S JULIE, W/o D Kumar, residing at No. 3/571-13F, Muniyasamy Kovil Back Side, Padanthal, Sattur, Virudhu Nagar, Tamil Nadu - 626203. My name S JULIE is wrongly mentioned in my husband's service record. My Correct name is **JULIE S** as per Aadhaar, Pan and other documents, which is correct. Affidavit No:FM 670681 dated 18/07/2026 before Notary.

NAME CHANGE

I, **S.LIKSHITA** D/o. M.R.Sivakumar resident of 4/460, Melcowhatty Muthurai Post, Udhagamandalam, The Nilgiris-643004, have changed my name from **S.LIKSHITA** to **LIKSHITHA S** vide affidavit date 22.07.2026 before combined court Coimbatore.

LIKSHITHA S

தமிழ்நாடு கனிம நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எண்.31, காமராஜர் சாலை, லேபர்க்கம், சென்னை-600005. தொலைபேசி: 044-28415003, 28511972

இ - ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்

1	பணியின் பெயர்	டாமின் நிறுவனத்திற்குட்பட்ட சில கிரானைட் குவாரிகளிலிருந்து வழங்கப்படும் கற்துண்டங்களை கிரானைட் கற்பலகைகளாக (Slabs) உற்பத்தி பணி
2	ஒப்பந்தப்புள்ளி எண்./ நாள் ஒப்பந்தப்புள்ளி id எண்.	86/விஸி-1/2026, நாள்-27.07.2026 2026_TNMIN_688937_1
3	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கில் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	27.08.2026 பிற்பகல் 4.00 மணி வரை
4	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் விலைப்புள்ளி திறப்பு பற்றிய விவரம்	28.08.2026 பிற்பகல் 4.00 மணி பின்னர் தெரிவிக்கப்படும்
5	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை & முன் வைப்புத் தொகை	ரூ.2360/- (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) ரூ.18,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு Tamilnadu e-tendering portal: https://tntenders.gov.in என்ற இணையதளத்தினை பார்வையிடவும்

செ.ம.தொ.இ/2377/ஒப்பந்தப்புள்ளி/2026

பொது மேலாளர் (முதி)

THE TAMIL NADU STATE APEX COOP. BANK LTD.,
New No.4 (Old No. 233), N.S.C Bose Road, Chennai – 600 001.
Phone: 044 - 25302352
E-mail: estate@tnsc.bank.in Website: www.tnscbank.com

TENDER NOTICE

(Tender Reference Number: TNSC/ACSTI/CATERING/2026)

The Tamil Nadu State Apex Coop. Bank Ltd., invites Tenders from the experienced Chennai based Catering Service Agencies for providing catering services at its Agricultural Cooperative Staff Training Institute (ACSTI), Madhavaram Milk Colony, Madhavaram, Chennai – 600 051.

The detailed terms and conditions of Tender may be obtained from the website **www.tntenders.gov.in** from **03.08.2026 to 08.06.2026** from **4.00 PM**

Last Date for submission of Tenders	**10.08.2026 upto 4 PM**
Date of opening of Tenders	**11.08.2026 at about 04.30PM**
Earnest Money Deposit	**Rs. 1,40,000/-**

DIPR/2373/TENDER/2026

DEPUTY GENERAL MANAGER (ESTATE SECTION)

aavin

THE COIMBATORE DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD, PACHAPALAYAM,
KALAMPALAYAM (P.O), PERUR VIA, COIMBATORE - 641010. Ph: 0422 - 2609899 Lines.
Ref. No: 10920/DE/Paneer Plant/2023

NOTICE INVITING TENDER (e-Submission Only)

The C.D.C.M.P.U.Ltd., invite **TWO PART TENDERS** by the way of e-submission through eProcurement portal from the reputed Manufacturers / Authorized Dealers for following items / works for The Coimbatore DCMPU Ltd., Coimbatore under NADP 2020-21 Scheme.

Sl.No.	NAME OF Item/Work	EMD (Rs.)
1	Installation of temperature and humidity control system for paneer production and packing area at Coimbatore Dairy	39,000/-

Tender Document Availability:	E-Submission End Date:	Technical Bid Opening Date:
29.07.2026 to 12.08.2026 up to 2.30 PM	12.08.2026 at 2.30 PM	13.08.2026 at 03.00 PM

The Technical Bid shall be opened through online eProcurement portal (http://tntenders.gov.in) on above mentioned date & address. The Bidder should submit their bids only through eProcurement portal (http://tntenders.gov.in). All other details can be seen in the tender documents; the tender documents can be downloaded at the above mentioned website. Corrigendum /Addendum to this publication, if any would appear only on the above said website.

IPRO/242/KOVAI/Tender/2026

(Sd)General Manager,
The Coimbatore D.C.M.P.U Ltd.,

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 17.08.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

கோயம்புத்தூர், 6வது தெரு காந்திபுரம், 0100020700428490, 0100020730012878, ஆலந்துறை கோயம்புத்தூர், 0117480730011409, 0117480750000092, அண்ணூர் கோயம்புத்தூர், 0121550700034498, 7218, 0121550730017497, 7499, 8348, அவினாசி, 0102530700754624, 0043, அவினாசி பேருந்து நிலையம், 0132500700021678, 2867, 0132500730011104, செட்டிப்பாளையம் கோயம்புத்தூர், 0120790700041736, 0120790730020827, 0828, 0830, 1135, சின்னமயபா